# 12. விறகு மற்றும் தீவனம்

எரிபொருள் என்பது கிராமப் புறங்களில் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகும். உணவுப் பொருட்களை சமைப்பதற்கும், விவசாயம் சார்ந்த பயன்பாட்டிற்கும் எரிபொருள் தேவைப்படுகிறது. இதேபோன்று தீவனம்

உற்பத்திற்கும் பால் உற்பத்தியினைப் பெருக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அவசியமாகும். இப்பொருள் குறித்த மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகளாக குழு கீழ்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1.கால்நடைகளுக்குத் தேவையான மாட்டு தீவனம் உற்பத்தியைப் பெருக்க தனிக் கவனம் செலுத்தலாம். அதற்கு தேவையான செடிகொடிகளை வளர்க்க நடவடிக்கைகள் எடுக்கலாம். கிராமத்திற்குத் தேவையான அளவு எரிப்பொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றை தோராயமாக மதிப்பீடு செய்து தொடர் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2.பயன் தரும் மரங்களைப் பெருக்க தரிசு நிலங்கள் மற்றும் தரமற்ற நிலங்கள் பரப்பளவை கண்டறிந்து மரங்கள் நடுவதற்கான இடங்களை தேர்வு செய்தல்.

3. தேர்ந்தெடுக்கப்படும் நிலங்களில் மரம் வளர்க்க நாற்றங்கால்கள், விதைப் பண்ணை போன்ற பணிகளின்பால் தனிக் கவனம் செலுத்தி ஊக்குவிக்கலாம்.

4.புகையில்லா அடுப்புகள் மற்றும் சூரிய அடுப்பு போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை பொதுமக்கள் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். இதுபோன்ற எரிபொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்தக் கூடிய கருவிகளை இனங்கண்டு அவைகளை பெருவாரியாக பொதுமக்கள் பயன்படுத்த தேவையான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தலாம்.

5. வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் ஊரக எரிப்பொருள் மற்றும் விறகு பயிரிடல் போன்ற பணிகளை மேற்பார்வையிடலாம், அத்துறையின் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்படும் காடுகளில் மீன் வளர்ச்சி தீவனம் உற்பத்தி செய்யலாம். எரிபொருள் பயிரிடும் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மேற்பார்வையிட்டு உரிய தொடர் நடவடிக்கை எடுக்கலாம்.

6. தரிசுநிலங்களில் எரிபொருள் மற்றும் தீவனம் கிடைக்கப் பெற மரங்கள் வளர்க்கும் திட்டங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடலாம்.

7. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தக் கூடிய தமிழ் நாடு வேளாண் வளர்ச்சி திட்டம், தீவன மேம்பாட்டு திட்டம், கால்நடை பராமரிப்பு இயக்குநர் கட்டுப்பாட்டுக் கீழ் செயல்படும் தமிழ் நாடு வளர்ச்சசி திட்டம், தீவன சிறு தொட்டிகள் வழங்குதல், வேர் நாற்று முனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மூலம் மாட்டு தீவனம் பெருக்கும் திட்டம் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு திட்ட செயல்பாட்டிற்கு உதவலாம்.

8. தேசிய, தரிசு நில மேம்பாட்டு வாரியம் அளிக்கும் நிதி உதவியுடன் வனத்துறையால் நிறைவேற்றப்படும் தீவன மேம்பாட்டு திட்டம், ஊரக வளர்ச்சி துறையின் மூலம் நிறைவேற்றப்படும் எரி வாயு தேசிய வளர்ச்சி திட்டம், ஊரக வளர்ச்சி துறையின் எரி அடுப்பிற்கான தேசிய திட்டம் ஆகிய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட தேவையான உதவிகளைச் செய்து மேற்பார்வையிடலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. எரிப்பொருளின் முக்கியத்தை கருத்தில் கொண்டு அவற்றினை பெருக்கக்கூடிய இனங்களின்பால் தனிக்கவனம் செலுத்தி எரிபொருள் உற்பத்தி பெருக்கலாம்.

2. தீவன உற்பத்தியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மரங்கள் மற்றும் மாட்டு தீவனம் உற்பத்தி பெருக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு தனியே ஒதுக்கலாம்.

3. எரிபொருள் சிக்கனம் பெறத்தக்க தொழில் முன்னேற மர அடுப்புகள் மற்றும் சூரியசக்தி பயனால் இயங்கும் அடுப்புகளின் பயன்கள் பற்றி மக்களிடையே தனி விழிப்புணர்ச்சி ஏற்பட நடவடிக்கைகள் எடுக்கலாம்.

4.தீவனத்திற்கு பயன்படும் மரங்களின் தன்மைகளை இனங்கண்டு, அவற்றை வகைப்படுத்தி எந்த எந்த நிலத்தில் பயிர் செய்யலாம் என்பதை முறைப்படுத்தி சாதகமாக உள்ள நிலங்களில் மரக்கன்றுகளை நடலாம். அப்பணியினை தனிக்கவனம் கொண்டு தீவன உற்பத்தியின் பயனை நேரிடையாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

5. வனத்துறையின் வாயிலாக நிறைவேற்றப்படும் எரிபொருள் பிரபலமாக்கும் திட்டம் மற்றும் அடுப்பு எரிக்க பயன்படும் விறகுகள் அளிக்கும் மரங்கள் பயிரிடல் திட்டத்தில் இணைத்து வனத்துறை அலுவலர்களுக்கு உதவலாம். அதே போன்று வனத்துறையின் மூலம் செயல்படுத்தும் இதர திட்டங்களான தரம் தாழ்ந்த நிலையிலுள்ள காடுகளைப்பேணி காத்தல் திட்டம், மீன் தீவன உற்பத்தியின் அடிப்படையில் கிடைக்கப் பெறும் மீன் தீவனம் மேலும் எரிபொருளாகப் பயன்படும் மரங்கள் வளர்ப்பு திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

6. சமூக தரிசு நிலங்களில் மற்றும் குளங்களின் பாசனப் பகுதிகளில் பயிர் செய்யும் தீவனமரங்களின் உற்பத்தியில் நேரிடையாக பார்வையிடட்டு செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

7. ஏனைய மலைப்பகுதிகளில் விறகு மரம், மற்றும் கால்நடைத் தீவனம் அளிக்கும் காடுகள் வளர்க்கும் திட்டத்தின் செயல்பாட்டை பார்வையிட்டு, மேற்பார்வை செய்யலாம்.

8. தேசிய தரிசு நில மேம்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் வனத்துறையானது தீவன உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருகிறது. மேலும், ஊரக வளர்ச்சி துறையின் மூலம் நிறைவேற்றப்படும். எரி வாயு, தேசிய வளர்ச்சி திட்டம் செயலாக்கப்படுகிறது. அதே போல் ஊரக வளர்சி துறையின் துணைக் கொண்டு எரிஅடுப்பிற்கான தேசிய திட்டம் திட்டமிட்டு செயல்படுத்தப்படுகின்றன. இது போன்ற தீவன எரிபொருள் முன்னேற்ற திட்டங்கள் அந்தந்த துறை செயல்பாட்டினையும் பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை ஊராட்சி ஒன்றியங்கள் வழங்கலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. வனத்துறை செயல்படுத்தும் பல திட்டங்களில் ஊரக எரிபொருள் மற்றும் விறகு பயிரிடுதல் திட்டங்களில் மாவட்ட ஊராட்சி தனிக்கவனம் செலுத்தலாம். இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திட்டமிடலாம்.

2. வனத்துறை செயல்படுத்தும் தரம் தாழ்ந்த காடுகளின் இனம் கண்டு உரிய மரம் வளர்க்கும் திட்டத்தை பார்வையிடலாம். வனத்துறையின் மீன் வளர்ச்சி தீவனத்திட்டத்தை மேற்பார்வையிடலாம். அப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யலாம்.

3. மாவட்ட ஊராட்சி பகுதிகளில் உள்ள தரிசுகாடுகளில் வளரக்கூடிய மரங்களின் மூலம் மாட்டு தீவன உற்பத்தி பெருக்கலாம். அது போன்றே பல்வேறு குளங்களில் பாசன வசதி குளங்களாக உள்ளன. அவைகளின் கரைகளில் தீவனம் அளிக்கக்கூடிய பயிர்கள் மரங்கள் வளர்க்கலாம். அதனால் தீவன உற்பத்தி பெருகும். இது போன்ற பணிகளில் தனிக்கவனம் கொண்டு திட்டமிடலாம்.

4. ஏனைய மலைப்பகுதிகளில் விறகு மரம் மற்றும் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யும் திட்டம் மாநில பொது திட்டத்தின் கீழ் நடைபெறுகிறது. அவைகளைதிட்டமிட்டு ஆய்வு செய்யலாம்.

5. கால்நடை பராமரிப்பு இயக்குநர் நிறைவேற்றும் தமிழ் நாடு வேளாண் வளர்ச்சி திட்டம் தீவன உற்பத்தி பெருக்க பெரிதும் உதவி செய்கின்றன. அப்பணிகளை நேரில் ஆய்வு செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

6. தீவன சிறு தொட்டிகள், வேர் நாற்று முனைகள் விநியோகம் திட்டத்தினை மக்களுக்கு செயல்படுத்த திட்டங்கள் தயார் செய்து, செயல்படுத்தி மேற்பார்வை செய்யலாம்.

7. தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தில் நிதி உதவி பெற்று வனத்துறை தீவன மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அப்பணிகளின் முன்னேற்றம் குறித்து துறையுடன் இணைந்து திட்டமிடலாம். திட்டத்தினை நிறைவேற்றி பணிகள் ஆய்வு செய்யலாம். மேலும், மேற்பார்வை செய்யலாம்.

8. ஊரக வளர்ச்சி துறையின் எரிவாயு தேசிய வளர்ச்சி திட்டம் மற்றும் எரி அடுப்பிற்கான தேசிய திட்டம் ஆகையவைகள் மூலம் நிறைவேற்றப்படும் தீவன உற்பத்தி பணிகளில் அத்துறையுடன் சரிவர பயன்பெற திட்டமிட்டு ஆய்வு மேற்கொள்ளலாம். இதனால் எரிபொருள் மற்றம் தீவனம் உற்பத்தி பெருக்கலாம் உரிய பயன்பெறலாம்.